DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கோமதி நாச்சியார் | Father/Husband Name : ராஜா |
| Age : 65 | Village : சுண்டங்குளம் |
| Taluk : | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15 Jun 2026 12:22

(Accused Present)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் சுண்டங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் புகார் மனு அளித்த ராஜா எனது கணவர் ஆவார். இவ்வழக்கின் எதிரி முத்துக்குமாரை எனக்கு தெரியும்.

2. இவ்வழக்கின் எதிரி முத்துக்குமாரின் வீட்டிற்கும் எங்களுடைய வீட்டிற்கும் இடையேயுள்ள சுவரை பொதுச்சுவராக கட்டியுள்ளோம். அதனால் எதிரி முத்துக்குமாருக்கும் எங்களுக்கும் பொதுச்சுவர் காரணமாக பிரச்சனை இருந்து வந்தது. எதிரி முத்துக்குமார் பொதுச்சுவருக்கு பணம் கேட்டிருந்தார். நாங்கள் கொடுப்பதாக கூறியிருந்தோம்.

3. அந்த சமயத்தில் 21.10.2020ம் தேதி மாலை 04.30 மணியளவில் எனது கணவர் எங்கள் வீட்டின் பின்புறமுள்ள கிணற்று அருகே நடந்து வந்துகொண்டிருந்தபோது முத்துக்குமார் எனது கணவரை பார்த்து நில்லுடா சுன்னி என்று அசிங்கமாக கேட்டார். உடனே முத்துக்குமார் எனது கணவரை அடிக்க வரவும், எனது கணவர் அதை தடுத்தார். உடனே முத்துக்குமார் எனது கணவரின் இடது கை பெருவிரலை கடித்து துப்பிவிட்டார். இதனால் எனது கணவருக்கு நகம் உடைபட்டு கையிலிருந்து இரத்தம் வந்தது. பின்னர் எனது கணவரை கீழே போட்டு மிதித்தார். இதனால் எனகது கணவர் அந்த இடத்திலேயே மயங்கிவிட்டார்.

4. இந்த சம்பவத்தை நேரில் பார்த்த எனது கொழுந்தன் ஈஸ்வரன், ஈஸ்வரி, செல்வராணி ஆகியோர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். உடனே முத்துக்குமார் பணம் தாராவிட்டால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எனது கணவரை பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார். எனது தம்பி ராமசாமி பாண்டியன் காயம்பட்ட எனது கணவரை கல்லமாநாயக்கன்பட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு எனது கணவருக்கு நெஞ்சுவலி இருந்ததாலும், காதிலிருந்து இரத்தம் வந்ததால் எனது கணவரை மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள்.

5. கல்லமநாயக்கன்பட்டி மருத்துவமனையில் போலீசார் வந்து விசாரணை செய்தபோது எனது கணவர் எனது மகன்களிடம் கேட்டு புகார் மனு அளிப்பதாக போலீசாரிடம் கூறிவிட்டார். பின்னர் விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அங்கு வந்த போலீசாரிடம் நடந்த சம்பவத்திற்கு எனது கணவர்

புகார் மனு அளித்தார். இந்த சம்பவம் எதனால் நடைபெற்றது என்றால் ஆஜர் எதிரிக்கும் எங்களுக்கும் பொதுச்சுவர் பிரச்சனை காரணமாக நடந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

6. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் நான் என்னுடைய வீட்டிற்கு முன்பு இருந்தேன் என்றால் பின்பு தான் இருந்தேன். சத்தம் கேட்டு தான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். என்னுடைய கணவரின் நகத்தை எதிரி கடித்து துப்பினார் என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், என்னுடைய கொழுந்தனார் சங்கரேஸ்வரன் என்பவர் தான் என்னுடைய கணவரின் நகத்தை கடித்து துப்பினால் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு முன் வரிசையில் உள்ள நான்கு பற்கள் கிடையாது என்றால் சரியல்ல.

7. அரசு மருத்துவமனைக்கு நான் சென்றேன் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் நானும் என்னுடைய கணவரும் ஆட்டோவில் சென்றோம். என்னுடைய கணவருக்கு மருத்துவமனையில் மருந்து வைத்து கட்டிய பிறகு வீட்டிற்கு வரவில்லை என்றால் சரிதான். நாங்கள் வழக்கு சம்பவம் நடைபெற்றதற்கு மறுநாள் காலை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டோம். விருதுநகர் அரசு மருத்துவமனையில் என்னுடைய கணவர் இருந்தபோது அங்கு வந்த போலீசார் சொன்னதை என்னுடைய கணவர் எழுதிக் கொடுத்தார் என்றால் என்னுடைய கணவர் கூறியதை போலீசார் எழுதிக் கொண்டார்கள்.

8. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து பொது சுவருக்கான பணத்தை எதிரி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எதிரி என்னுடைய கணவரை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசவில்லை என்றால் சரியல்ல. பொது சுவருக்கு வழக்கு எதிரி என்னுடைய கணவரிடம் பணம் கேட்டதற்கு என்னுடைய கணவரும், என்னுடைய கொழுந்தனார் ஈஸ்வரன் என்ற சங்கரேஸ்வரனும் சேர்ந்து எதிரியை அடித்தார்கள் என்றாலும், அதனால் எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விடுவார் என்று பயந்து சங்கரேஸ்வரன் என்னுடைய கணவரின் கையில் காயத்தை ஏற்படுத்தி, அதை வைத்து எதிரி மீது புகார் கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

9. இந்த வழக்கு எதிரி என்னுடைய கணவரை பார்த்து அசிங்கமாக திட்டவில்லை என்றாலும், காயம் ஏற்படுத்தவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் சொல்லிக் கொடுத்தது போல் பொய்யான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

15 Jun 2026 12:36

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P